

கடலூர் கிழக்கு மாவட்டம்,குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதி,வடலூர் நகராட்சியில் அய்யன் ஏரி புனரமைப்பு பணி கலைஞர் நடைபாதை திறப்பு விழா நடைபெற்றது. வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் திறந்து வைத்தார். மாவட்ட கல்விக்குழு தலைவர் வி.சிவக்குமார் தலைமை தாங்கினார். நகர மன்ற தலைவர் சு.சிவக்குமார், நகராட்சி ஆணையாளர் மல்லிகா, வடலூர் நகர செயலாளர் த.தமிழ்ச்செல்வன், துணைத் தலைவர் சுப்புராயலு,நகராட்சி பொறியாளர் சிவசங்கரன்,பொதுக்குழு உறுப்பினர் கே.பி.ஆர்.பாலமுருகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# திருச்சிமுனையில் திருப்புமுனை



மகிழ்ச்சி

உணர்ச்சி

எழுச்சி

நெகிழ்ச்சி

எல்லாமும்
ஆனது

எங்கள்
திருச்சி....

ஆம்...

கருப்பு சிவப்பு
படை

காவேரி
நதிக்
கரையை

கடற்
கரையாக
மாற்றியது..

கொள்ளிடமும்
மனிதத்
தலைகளால்

கொள்ளாத
இடமாக

சிறுகனூர்
பெருகனூர்
ஆனது ..

தேர்தலில்
பங்கேற்கும்
முடிவுக்கு

1956ல்
அண்ணாவுக்கு
வாழ்த்திசைத்து
வழி அனுப்பிய

அன்பில்
கோட்டமாம்

அதே
பொன்னி
நதிக்கரை

இன்று..
2026ல்

“மீண்டும்
ஸ்டாலின்

வேண்டும்
ஸ்டாலின்”
என்னும்

தித்திப்பு

பேரொலியை

வானிடியாய்
ஒலித்து

பத்துலட்சம்
படை
வீரர்கள் சூழ

பரணி பாடிக்
களித்தது...

கரிகால்
பெருவளத்தான்
கட்டிய
கல்லணை போல்

கம்பீரமாய்
நிலைத்து

பவள விழா
கடந்த

எழு கதிர்
இயக்கத்தின்

மூன்றாம்
தலைமுறையை

புதிய தலை
முறைகளோடு

புகழேந்திச்
செல்லும்

முத்துவேல்
கருணாநிதி
ஸ்டாலினின்

தொடர்
வெற்றித்
தோரணம்

“ஏழாம் முறை
அரியணையில்
எங்கள்
திமுக “என
பற்றிப் படர்ந்து

புனித ஜார்ஜ்
கோட்டையில்
புதுச் சரித்திரம்
படைத்திட

சோழ நாட்டு
தீரர் கோட்டம்

ஆலவட்டம்
வீசி

ஆர்ப்பரித்து
மகிழ்ந்தது..

ஆம்...

இலக்கு
இருநூறு

இசைத்தது
சிறுகனூரு



**மருது. அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக்குழு துணைத் தலைவர்

## சேத்துப்பட்டில் அறுசுவை உணவு வழங்கல்!

*சென்னை, மார்ச் 12-* கழகத் தலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களின் 73-ஆவது பிறந்த நாளை முன்னிட்டு கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில், எழும்பூர் தொகுதியில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிடும் வகையில் 12 தொடர் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இதன் ஒரு பகுதியாக, வார்டு எண்.108, சேத்துப்பட்டு, மெக்நிக்கல்ஸ் சாலையில் அமைந்துள்ள எஸ்.ஆர்.எஸ். சர்வோதயா மகளிர் இல்லத்தில் நடந்த நிகழ்ச்சியில், அவ்வில்லத்தில் தங்கியிருக்கும் மாணவிகளுக்கு அறுசுவை இரவு உணவு, அவ்வில்லத்திற்கு ஒரு மாதத்திற்குத் தேவையான அரிசி, துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, சமையல் எண்ணெய், சர்க்கரை, மிளகாய், தனியா, ரவை, சேமியா, நெய், முந்திரி உள்ளிட்ட 32 வகையான மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு மற்றும் அம்மாணவிகளுக்குப் போர்வை ஆகியவற்றைச் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் வழங்கினார்.

இந்நிகழ்வில் அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதி மா.காந்தி, 108-வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், எழும்பூர் தெற்குப் பகுதி வர்த்தகர் அணி முன்னாள் அமைப்பாளர் இரா.வெற்றிவேல், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜெ.சிலம்பரசன், எல்.சுகுமாறன்; 108-வது வட்ட இளைஞரணி அமைப்பாளர் மணிகண்டன், 108 ‘அ’ வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார், எழும்பூர் தெற்குப் பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் சி.முத்துலெட்சுமி, 108-வது வட்டத் துணைச் செயலாளர் ஜெ.இந்திராகாந்தி, முன்னாள் அவைத் தலைவர் கி.புஷ்பராஜ், தலைமைக் கழகப் பேச்சாளர் எம்.இ.தேவநிதி, பெரியமேடு சரவணன், எட்டு (எ) விஜயகுமார், 108-வது வட்டச் செயற்குழு உறுப்பினர் வீ.பாபு, 108-வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஜோ. சந்தோஷ்குமார், பி.பிரவீண்குமார், 58 ‘அ’ வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தி.ராஜ்குமார், 77-வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ச.சதீஷ், 99-வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சு.குணா, பாக முகவர்கள் ஜி.பிரவீண்குமார், கவிதா; பாக இளைஞர் அணி கே.சூர்யா மற்றும் ஆர்.வேலு, முத்துக்குமார், கண்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகி களும் அணிகளின் அமைப்பாளர்களும் கழகச் செயல்வீரர்களும் கலந்து கொண்டனர்.



செஞ்சி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பா.ம.க. உள்ளிட்ட மாற்றுக் கட்சியினர்25க்கும் மேற்பட்டோர் அக் கட்சியில் இருந்து விலகி விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான்,பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், நகர செயலாளர் கார்த்திக் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

### இதுவரை ரூ.6 கோடியே 43 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

### 2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

### 2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

## கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 43 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 10-03-2026** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | ஆர். சங்கர்,<br>வ.உ.சி.2வது தெரு, பொன்னியம்மன்மேடு, சென்னை–110 | –25,000/– |
| 2. | ஆ. உக்கிரமூர்த்தி,<br>அழகப்பசமுத்திரம் ஊராட்சி, பண்ருட்டி, கடலூர் மாவட்டம் | –25,000/– |
| 3. | த.அமர்சிங்,<br>புரசக்குடி, வேம்புகுடி அஞ்சல், பாபநாசம், தஞ்சை மாவட்டம். | –25,000/– |
| 4. | பி. பாலசுப்பிரமணியன்,<br>மேலையூர், கருவாழக்கரை அஞ்சல், மயிலாடுதுறை | –25,000/– |
| 5. | கா.இராஜாராமன்,<br>வேளூர், திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம் | –25,000/– |
| 6. | ஆ. வேளாங்கண்ணி,<br>பெரியஆலம்பட்டி, இனாம்குளத்தூர் அஞ்சல், திருச்சி | –25,000/– |
| 7. | எம்.கிருஷ்ணமூர்த்தி,<br>மல்லசமுத்திரம், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் | –25,000/– |
| 8. | ஆர். சின்னசாமி,<br>எஸ்.ஆர்.எம்.எஸ்.மில் ரோடு, பொள்ளாச்சி, கோவை | –25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |

### பெரம்பலூரில் ஆ.இராசா எம்.பி. முன்னிலையில்

# அ.தி.மு.க.வைச் சேர்ந்த 200 பேர் கழகத்தில் இணைந்தனர்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் – எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

*பெரம்பலூர், மார்ச் 12-* பெரம்பலூர் மாவட்டத்தில், மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், கழக துணைப் பொதுச்செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா எம்.பி. முன்னிலையில்,

ஓ.பி.எஸ். அணியைச் சேர்ந்த அ.தி.மு.க.வினர், வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய செயலாளர் முத்தமிழ்ச்செல்வன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி சாத்தனவாடி துரை ஆகியோர் ஏற்பாட்டில் ஜெ.பேரவை அரும்பாவூர் முன்னாள் நகரச் செயலாளர் ஆர்.பெரியசாமி, பா.ம.க. அரும்பாவூர் முன்னாள் நகரச் செயலாளர் ரவிக்குமார் மற்றும் சாத்தனவாடி,

மேட்டுப்பாளையம், எறையூர் சர்க்கரை ஆலை ஆகிய கிராமங்களில் இருந்து 200 பேர் தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சயகோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன்,

மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம்.இராஜ்குமார், செ.நல்லதம்பி, தி.மதியழகன் ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் சி.ராஜேந்திரன், ந.ஜெகதீஷ்வரன், அழகு.நீலமேகம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரிபாஸ்கர், துணை அமைப்பாளர் டி.ஆர்.சிவசங்கர், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம்,

உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி, விழுப்புரம் மேற்கு நகரம், 23 வது வார்டு, பூந்தோட்டம் பகுதியில், மாவட்டக் கழக பொறுப்பாளரும், சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் விழுப்புரம் மேற்கு நகர கழக பொறுப்பாளர் இரா.சக்கரை, தலைமை பொதுக்குழு உறுப்பினர் N.பஞ்சநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.